www.facebook.com/ebooksintamil

3

# தமிழர் மருத்துவ நூல்

OR

# சித்தர் வைத்தியம்.

BY

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

கிருஷ்ண விலாச பிரஸ், கோயமுத்தூர்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

டிப்டி சூபரண்டாயிருந்து காலஞ்சென்ற

## சிவ ஸ்ரீ C. S. சுந்தர முதலியார்

அவர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்.

| | | |
|---|---|---|
| (1) | திருமந்திரம் (உபதேசப்பகுதி) | 0—8—0 |
| (2) | அண்ட பிண்ட சமத்துவ விளக்கம் | 0—4—0 |
| (3) | அண்ட பிண்டப் படம் | 0—4—0 |
| (4) | சுந்தரமூர்த்தி நாயனார் மான்மியம் | 0—2—0 |

## துடிசைகிழார் அ. சிதம்பரனார்

அவர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்.

I. ஒழுக்க நூற் பிரிவு.

| | | |
|---|---|---|
| (1) | விபூதி விளக்கம் | 0—2—0 |
| (2) | உருத்திராக்க விளக்கம் | 0—4—0 |
| (3) | நித்திய கரும விளக்கம் | 0—4—0 |
| (4) | மாகேசுர பூசை விளக்கம் | 0—4—0 |
| (5) | இங்கித மணவியல் | 0—6—0 |
| (6) | ஆனைந்து or பஞ்சகவ்வியம் | 0—8—0 |
| (7) | மரணக்கிரியா விளக்கம் | 0—8—0 |

II. ஞான நூற் பிரிவு.

| | | |
|---|---|---|
| (1) | சிவஞான போத முதனூல் விளக்கம் | 0—8—0 |
| (2) | தம்பிரான் தோழர் தவவாழ்க்கை | 0—4—0 |
| (3) | சிவலிங்க உருவ விளக்கம் | 0—8—0 |
| (4) | சிவ பூசைச் சுருக்க விளக்கம் | 0—8—0 |

## முகவுரை.

இந்நூலானது 1928ம் வருடத்தில் சென்னை அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி மாணவர் சங்கத்தில் காலம்சென்ற திரு வாளர் வைத்தியரத்ன முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் சித்த வைத்தியச் சிறப்பு, சரித்திரம் முதலியவைகளைப் பற்றிப் பேசத் தயாரித்ததாகும். இது பலருக்கும் உபயோகமாகும்பொருட்டு இப்போது அதனைப் புத்தக உருவமாக வெளியிடுகின்றேன்.

இதனைப் படிப்போர் ஆங்காங்கு பலருக்கும் எடுத்துச் சொல்லி, முனிசிபாலிடிகளிலும் ஜில்லா போர்டுகளிலும் சித்த வைத்திய முறையைக்கொண்ட ஆஸ்பத்திரிகளை ஏற்பாடு செய்யக் கிளர்ச்சி செய்வார்களானால் அதுவே இந்நூலின் பயனாகும்.

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

உ
கணபதி துணை.

# தமிழர் மருத்துவ நூல்
OR
# சித்தர் வைத்தியம்

## PART I.

தமிழருடைய மருத்துவநூலின் சரித்திரத்தை நாம் அறிந்து கொள்ளுவதன் முன்னம் தமிழ் நாட்டின் சரித்திரத்தைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

### தமிழ்நாட்டின்மீது படையெடுப்பு.

இதுவரை தமிழ் நாட்டின்மீது படையெடுத்து வந்தவர்கள் பதின்மர். நாம் இப்போது பதினோராவது படையெடுப்பில் இருக்கிறோம்.

முதல் படை எடுப்பு:—ஆப்பிரிக்கா தேசத்து நீகிரோ ஜாதியாரால். அவர்களைத்தான் நம் புராணங்களில் திரிபுராதிகள்—இராக்கதர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாம் படை எடுப்பு:—சீனதேசத்து மங்கோலியர்களால். அவர்களைப்புராணங்களில் சூரன், பதுமன், தாருகன், சிங்கமுகன் என்று கூறப்பட்டிருக்கிறது.

மூன்றும் படை எடுப்பு:—அமெரிக்கா தேசத்து சிவப்பு இந்தியர்கள். அவர்கள்தான் இரணியன், இரணியாக்கன் முதலியோர்.

நான்காம் படை எடுப்பு:— ஆரியர்கள்.
ஐந்தாம் படை எடுப்பு:— கிரேக்கர்கள்.
ஆறும் படை எடுப்பு:— மகமதியர்.
ஏழாம் படை எடுப்பு:— டச்சுக்காரர்.
எட்டாம் படை எடுப்பு:— டேன்சுக்காரர்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



ஒன்பதாம் படை எடுப்பு:— போர்த்துக்கேசியர்.
பத்தாம் படை எடுப்பு:— பிராஞ்சுக்காரர்.
பதினோராம் படை எடுப்பு:— ஆங்கிலேயர்.

சித்த வைத்தியமானது, சோதிடம் முதலிய கலைகள் போலவே தமிழர்களிடத்தில் முதற் படை எடுப்புக்கு முந்தியே சிறப்புற்று விளங்கி வந்திருக்கிறது

## தமிழ்நாட்டில் உள்ள பூண்டுகளே தமிழர்களை சித்தர்களாக்கிவிட்டன.

தமிழர்களுடைய பிறப்பிடமாகிய தமிழ் நாடானது மருந்துக்கு உதவக்கூடிய பூண்டுகளையும், செடிகளையும். கொடிகளையும் கிழங்குகளையும் மரங்களையும் மிகுதியாகக்கொண்டு இருக்கிறது.

இப்பூண்டு வகைகள் தமிழ்நாட்டு மலைகளில் அதிகம்.

கொல்லிமலை, வெள்ளிமலை, சுருளிமலை, பொதிகைமலை முதலியவை மலைகளில் முக்கியமானவை. ஒவ்வோர் காலத்தில் இம்மலைகளிலேயே மருத்துவக் கூட்டங்கள் கூடி ஆராய்ச்சியாளர்களை நியமனம் செய்து அம்மலைகளிலுள்ள இடங்களைக் குறிப்பிட்டு பூண்டு, செடி, கொடி, கிழங்கு, மர வகைகளின் அட்டவணையைத் தயாரித்துள்ளார்கள்.

அவ்வட்டவணைகளுக்குத்தான் கொல்லிமலைநிகண்டு, சுருளிமலை நிகண்டு, வெள்ளிமலை அகராதி, பொதியமலை நிகண்டு என்று கூறுவார்கள்.

ஏனைய நாடுகளில் உள்ள மொட்டையான மலைகளைப்போல் அல்லாது தமிழ் நாட்டு மலைகள் மருந்துக்கு உதவும் செடி, கொடிகளால் நிறைந்திருக்கின்றன.

## தமிழர்களின் குணம்.

தமிழர்கள் இயற்கையிலேயே உற்சாகத்தையும், தீவிர புத்தியையும், கூர்ந்து நோக்கும் குணத்தையும் உடையவர்கள். அத



னால் அவர்கள் பொருள்களைப் பிரித்து அறிந்துகொள்ளுவதிலும், சமன் செய்து சீர்தூக்கிப் பார்ப்பதிலும், உற்று நோக்குவதிலும் வல்லவர்கள். தமிழர்கள் பெரும்பாலும் பெருந்தன்மையும், சாந்த குணமும், தியான சிந்தையும், தியாக புத்தியும், வாஞ்சையும் உள்ளவர்கள். "தமிழர்கள் புத்திநுட்ப முள்ளவர்கள்" என்று ஐரோப்பிய நாட்டினரும் கொண்டாடும் பெருமை வாய்ந்தவர்கள் (G. U. Pope).

தமிழ் நாட்டின் வளப்பமும் மலை வளப்பமும் மருந்துக்கு உதவும் பூண்டு வகைராக்களின் மிகுதியுமே தமிழ் நாட்டில் மருத்துவநூல் வளர்ச்சிக்கும் சாதகமாயிருந்தவை.

பழங்குடி அரசர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் மருத்துவ சாலைகளையும் ஆராய்ச்சி நிலையங்களையும் பல இடங்களில் அமைத்து இம்மருத்துவக்கலையை தாயனைய கருணை காட்டி வளர்த்து வந்தார்கள். அக்காலங்களில் அநேக நூல்கள் எழுதப்பட்டன.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரை இருந்த கடைச்சங்க காலத்திலும் கூட மருத்துவன் தாமோதரனார் என்பவரும் மாங்குடி மருதனார் என்பவரும் இம்மருத்துவத்தில் சிறந்து விளங்கினார்கள்.

கடைச்சங்கம் என்பது பாண்டியனுடைய பல் கலைக்கழகம். அதில், மருந்துக்குத் தனிப் பரிக்ஷைகள் இருந்தன. அதற்கு ஒரு தனிக் கூட்டமும் (committee) ஏற்படுத்தப்பட்டிருந்தது.

கடைச்சங்க காலத்திலும் அதற்கு முந்திய சங்க காலங்களிலும் பல நூல்கள் ஆக்கப்பட்டன:—

அவைகளில் முக்கியமானவை:—

(1) பெருந்திரட்டு (2) குறுந்திரட்டு
(3) விதி நூல் (4) உடல் நூல்
(5) நாடி நூல் (6) உள நூல்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



(7) சிவ சாலம் (8) சத்தி சாலம்
(9) முருக சாலம் (10) முருகர் இரதம்
(11) மருத்துவக்கண்ணாடி (12) மணி or கட்டு நாலாயிரம்
(13) செந்தூரம் மூந்நூறு (14) நீறு இருநூறு
(15) இந்திர சாலம் முதலியன

இந்நூல்களினின்றும் உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்ட பாக்கள் பல நமக்கு எட்டியிருக்கின்றன. அப்பாக்கள் இரத்தினங்களைப்போல் அவ்வுரை நூல்களில் மிளிர்கின்றன.

மேற்சொன்ன நூல்களில் பல குமரிகண்டம் கடல் கொண்டழிந்தபோது கூடவே அழிந்துபோயின.

கடைச்சங்க காலத்தில் யாக்கப்பட்ட நூல்கள் பல கி. பி. 14ல் கண்ணகியால் மதுரை எரியுண்டபோது அழிந்துபோயின.

அதற்குப் பிற்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இருந்த ஏட்டுச் சுவடிகள் பெரும்பாலும் கரையானுக்கு இரை ஆயின.

போதாக்குறைக்கு நம்மவர்களில் பலர் ஏட்டுச்சுவடிகளை நவராத்திரி காலத்தில் ஆற்றில் வெள்ளப் பெருக்கில் தொலைத்தார்கள்.

இம்மாதிரி தமிழ் நாட்டில் உள்ள 64 கலைகளும் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் நம்மவர்களுடைய அறியாமையினாலும், அஜாக்கிரதையாலும் நாசமாயின. Vide

ஏரணம், உருவம், யோகம், இசை, கணக்கு, இரதம், சாலம்
தாரணம், அறமே, சந்தம், தம்பம், நீர், நிலம், உலோகம்,
ஆரணம், பொருள் என்றின்ன ஆனநூல் யாவும் வாரி
வாரணங் கொண்டதந்தோ வழி வழிப்பெயருமாள.

இம்மாதிரி நூல்கள் அழிந்துபோகவே தமிழர்கள் எவ்வளவு தூரம் இம் மருத்துவக் கலையில் அறிந்துள்ளார்கள் என்று அளந்து கூற முடியவில்லை.



ஆனால் இப்போது கைக்கெட்டும் ஒன்று இரண்டு நூல்களாலும், கல்வெட்டுகளாலும் ஒருவாறு இச்சித்தர் வைத்தியம் எவ்வளவு தூரம் சிறப்புற்றிருந்தது என்பதைக் கூறலாம்.

சோழ வம்சத்தில் கடைசி அரசனாகிய மூன்றும் குலோத்துங்கனுடைய கல்வெட்டுக்களால் இக்கலை அவனால் ஆதரிக்கப்பட்டு வந்ததென்பதை அறிகிறோம்.

ஐந்து கண்டங்களிலும் இணையில்லா நூலாக விளங்கும் திருக்குறள் என்னும் நூலில் இம்மருத்துவக்கலைக்குத் தனியாக ஒரு அதிகாரம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் மருந்து என்னும் அதிகாரம். அவ்வதிகாரம் 10 குறட்பாக்களை உடையது.

ஒரு சிறிய குளிகையில் பலசரக்குகளின் சாரங்கள் அமைந்து கிடப்பதைப்போல, தமிழ் மொழியில் உள்ள வார்த்தைகள் பல சரித்திரங்களை உட்கொண்டு இருக்கின்றன.

மருந்து என்னும் பதத்திற்கு மூன்று பொருள்கள் உண்டு:—

(1) மருந்து Medicine
(2) இரண வைத்தியம் Surgery
(3) மருத்துவம் Midwifery

அதனாலேயே குறளாசிரியர் அப்பெயரை அதிகாரத்துக்கு இட்டார்.

இம் மூன்றுவிதமான முறைகளும் குறளாசிரியார் காலத்துக்கு முன்னிட்டே சிறப்புற்று விளங்கி வந்தன

மருத்துவச்சி, பரிகாரி, ப்ண்டிதன் என்னும் வார்த்தைகளே சான்று பகரும்.

திருவள்ளுவர் முதற்குறளிலேயே மிகினும் குறையினும் நோய் செய்யு நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று என்று கூறியுள்ளார்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



ஈண்டு நூலோர் என்றது மருத்துவம் வல்ல புலவர்களை.

குறளாசிரியர் தனக்கு முன்னிருந்த மருத்துவ நூல்களை நன்றாய்ப் படித்து ஆராய்ந்து, பத்துக் குளிகைகளாக பத்துக் குறட்பாக்களில் கொடுத்திருக்கிறார்.

எட்டாவது குறளில்
நோய் நாடி, நோய் முதனாடி யது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்

என்று கூறியுள்ளார்.

அதாவது, வியாதி இன்னதென்று முதலில் தெரிந்துகொள்ளவேண்டும், பிறகு அந்நோய் உண்டானதற்குக் காரணத்தை அறிந்துகொள்ளவேண்டும், பிறகு அந்நோய் தீரும்படியான தகுந்த மருந்தைக் கொடுக்கவேண்டும் என்று அறுதியிட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் பலர் வியாதி இன்னதென்று மாத்திரம் சொல்லக்கூடியவர்களும், வியாதியைச் சொன்னால் மருந்து மாத்திரம் கொடுக்கக்கூடியவர்களும், மருந்துகளைச் செய்வதில் மாத்திரம் காலங் கழிப்பவர்களும், குழந்தை வைத்தியம் மாத்திரம் பார்ப்பவர்களும், இரண வைத்தியம் மாத்திரம் தெரிந்தவர்களும், பிரசவ வைத்தியம் மாத்திரம் தெரிந்தவர்களுமாக இருந்தார்கள்.

இந்நாட்டில் பிரசவ வைத்தியம் எவ்வளவு சிறந்த முறையில் இருந்திருந்தது என்பதைப் பாருங்கள்.

கொங்குநாட்டில் மங்கலப்பட்டி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த ஊரானது ஒரு மருத்துவச்சிக்கு கொங்கு அரசன் ஒருவனால் தானமாகக் கொடுக்கப்பட்டது அம்மருத்துவச்சியின் சந்ததியார் இன்னும் அவ்வூரை இறையிலியாக அனுபவித்து வருகிறார்கள். அவர்களுடைய செப்பேட்டுப் பட்டயத்தில் தானமாகக்கொடுத்த வரலாறு செதுக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, அரசன் மகள் கருப்பம் முற்றி பிரசவவேதனைப் பட்டாள். குழந்தையின் தலை வயிற்றில் திரும்பி விட்டது, வேதனை அதிகப்பட்டுவிட்டது. பல வைத்திய நிபுணர்கள் பார்த்துக் கை விட்டுவிட்டார்கள். குழந்தையைக் கொன்று துண்டு துண்டாக்கித் தான் எடுக்கவேண்டும் என்றார்கள். அப்படி எடுத்தாலும் தாய்க்கு அபாயம் இல்லையென்று சொல்லவும் முடியாதென்றார்கள்.



இந்த நிலையில் அரசன் பார்த்தான். தன் நாடெல்லாம் தண்டோராப் போடுவித்தான்.

குழந்தையையும் தாயையும் யார் ஒருவர் பிழைக்க வைக்கிறார்களோ அவருக்குத் தகுந்த பரிசளிக்கப்படும் என்று பறை அறிவித்தான்.

மங்கலப்பட்டியிலுள்ள சாதாரணமான மருத்துவச்சி ஒருத்தி மங்கலை என்பாள் முன் வந்தாள். வந்து தான் செய்வதாக ஒப்புக்கொண்டு, தாயை ஒரு அறையில் மேடையின்பேரில் கிடத்தி, வயிற்றைப்பீறி, குழந்தையை உயிருடன் எடுத்துவிட்டு, பழயபடி வயிற்றை தைத்து இரணத்தை ஆற்றி தாயையும் பிழைக்க வைத்தாள். இக்காலத்தில் அதற்கு சிசேரியன் ஆப்ரேஷன் என்று கூறுவார்கள்.

### இச்சரித்திரத்தை

"குறைவறு தெண்ணீர் நதியணை காந்தபுரத்தொருநல்
இறைமகளார் மகவினைப் பொறுதுடலேங்க வகிர்
துறைவழி யேற்று மகிழ்வூட்டு மங்கலை தோன்றிவளர்
மறைவழி தேர் நறையூர் நாடுசூழ் கொங்குமண்டலமே."

என்று அழகாகப் பாடியுள்ளார்.

அரசன் சந்தோஷமடைந்து அந்த மங்கலைக்கு ஒரு ஊரை இனமாக அளித்து பட்டயமும் கொடுத்தார். அன்று முதல் அதற்கு மங்கலைப்பட்டி என்று பேராயிற்று.

இதைக்கொண்டு இம்மருத்துவக்கலை எவ்வளவு உன்னத நிலையில் இருந்தென்று பாருங்கள்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



இம்மருத்துவக்கலையுடன் இயற்கை வாழ்வும் (Naturopathy) கையாளப்பட்டு வந்தது.

இயற்கை வாழ்வும் வியாதிக்கு ஒரு மருந்தே. ஆகையால் மருந்து என்னும் அதிகாரத்திலேயே வள்ளுவர் இயற்கை வாழ்வைப் பற்றிச் சிறப்பித்துள்ளார்.

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

3. அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

4. அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

5. மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணில்
ஊறுபாடில்லை உயிர்க்கு.

6. இழிவறிந்துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
குழிபேரிரையான் கண் நோய்.

7. தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப் படும்.

சித்தர் வைத்தியத்தில் சிறந்தவரில் திருவள்ளுவர் ஒருவர்.

சித்த வைத்தியத்தில் கீழ்க்கண்ட நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

(1) தேரையர் மூவாயிரம்.

(2) பதார்த்த குணசிந்தாமணி.

(3) கொங்கணவர்—புலிப்பாணி—அகத்தியர்—திருமூலர்—இடைக்காடர் — கருவூரார் — கஞ்சமலைச்சித்தர் — பொதியமலைசித்தர் என்ற இவர்கள் எழுதின நூல்கள்.

ஆனால் சித்தர்களுடைய பெயரை வைத்து பல போலி நூல்கள் வெளிக்கிளம்பியுள்ளன. அவைகளை நாம் வேறு பிரித்தறிய வேண்டும்.



## மருத்துவ நூல் உற்பத்திக்குக் காரணம்.

1. மனிதர்களுக்கு வாதத்தில் பயித்தியம் உண்டு. வாதம் என்பது இரசாயனம் (Chemical Science). எல்லா உலோகங்களையும் தங்கமாக மாற்றவேண்டும் என்னும் அவா.

இந்த ஒரு ஆசையே மருத்துவ நூல்கள் உண்டாவதற்குக் காரணம் என்பர்.

வாதிகள் முதன் முதல் உலோகங்களை சுத்திசெய்து, புடம் இட்டு அல்லது உருக்கி, வேதிசெய்து, தங்கம் செய்யவேண்டும்.

புடம் இடும்போது நீறு, கட்டு, மணி இவைகள் உண்டாகும். அவைகளிலிருந்து குளிகைகள் செய்து பல வியாதிகளுக்கு கொடுத்துவந்தார்கள். அம்முறைகளை எல்லாம் தமக்கும் பிறருக்கும் பயன்படும்பொருட்டு நூல்களாக எழுதினார்கள்.

சித்தர்கள் எல்லாம் முதற்றரமான இரசாயன சாஸ்திரிகள் (Chemists). அக்காலத்தில் அவர்களிடம் முதற்றரமான வாதசாலைகள் இருந்தன.

2. இன்னொரு வரலாறு:—

ஓர்காலத்தில் நான்முறை தேர்ந்த புலவர்களும், தத்துவம் வல்லார்களும், முனிபுங்கவர்களும், பண்டிதர்களும் எல்லாரும் பொதியமலையில் கூடினார்கள். அங்கு கூடினபொழுது அவர்கள் பின்வருமாறு பேசலானார்கள்:—

"நம்முடைய சரீரம் கடவுளால் கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட தேகமானது 4448 வியாதிகளால் பீடிக்கப்படுகிறது; சரீரம் அதனால் நசித்துப் போகிறது. கடவுள் கொடுத்த தேகத்தை வியாதிக்கு இடமாக்கி வீணாக்குவதில் பயன் இல்லை.

இந்த தேகம் இருக்கும்போது அறத்தைச்செய்து, பொருள் ஈட்டி, இன்பத்தை அனுபவித்து வீடு அடைதலே பிறவியின் பயன். வந்த வரவை மறந்து மாதர், பொன், பூமி மயக்கத்தி

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



வாழ்ந்து, இருமல் ஈளை முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்டு மாய்வதில் காரியம் இல்லை.

ஆகையால் சாகாமல் இருக்கவும், வியாதியின்றிச் சுகமாக வாழவும் நாம் வழி தேடவேண்டும். அதற்குரிய ஆதாரங்களை ஒவ்வொருவரும் தேடவேண்டும் என்று தீர்மானித்து எல்லோரும் பல இடங்களுக்கு பிரிந்துபோய் ஆராய்ச்சி செய்து வழிகளைக் கண்டு நூல்கள் எழுதினார்கள். அந்த நூல்கள் தான் சித்தர் நூல்கள். அவர்கள் எழுதிய முறைகள் தான் சித்தா முறை.

உடல் நூல் என்ற நூலை ஒரு சித்தர் எழுதியுள்ளார். அவைகளில் உள்ள பாசுரங்களில் சிலவற்றை ஈண்டு சொல்லுகிறேன். அதிலிருந்து சித்தர்களுடைய சிறப்பைக் கண்டுகொள்ளலாம்.

1. நாடியும் நாளமும் நவில இளஎலும்பும்
வெள்ளை நீரும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமும் தந்தையின் கூறும்

2. சிறிய குடலும் சிவப்பு நீரும்
மருவிய கொழுப்பும் மண்ணும் ஈரலும்
நுவல் நுரை ஈரலும் நோக்குமிதயமும்
தசையும் நிணமும் தாயின் கூறும்

3. அறிவும் ஆக்கமும் ஆழ்ந்த நோக்கமும்
இன்பமும் துன்பமும் இனிய வாழ்க்கையும்
உயிரின் குணமென உரைப்பர் நூல் வலோர்

4. உடலின் அமைப்பும் ஒள்ளிய நிறமும்
ஆடலும் ஆண்மையும் அமைந்த நிலையும்
நாணமும் மடமும் நான்ற் கொள்கையும்
உணவின் சாரமென் றுரைத்தனர் நூலோர்

இவ்வாறு வெகு அழகாகப் பாகுபடுத்தி, பிறகு ஒவ்வொரு உறுப்புக்களுக்கும் ஒவ்வொரு அதிகாரமாக வகுத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எழுதியுள்ளார்கள்.



இதுவரை கூறியதாவது:—

மருத்துவக் கலையானது தமிழ்நாட்டில் பண்டைக் காலந் தொட்டே சீரிய நிலையில் இருந்ததென்றும், இப்போதும் இருக்கிறதென்றும், மருத்துவக்கலையைப்பற்றி எழுதப்பட்ட அருமையான நூல்கள் பல, கடல் ஊழிகளாலும், நெருப்பு ஊழிகளாலும், கரையான் அரித்த படியாலும், அறியாமை மேலிட்ட மக்கள் ஆற்றிலிட்டு அழித்தபடியாலும் அழிந்து ஒழிந்தன என்றும், தென் தமிழ் நாட்டின் இயற்கை வளப்பமானது இம்மருத்துவக்கலை வளர்ச்சிக்குச் சாதகமாயிருந்ததென்றும், தமிழ்நாட்டு அரசர்களும் இக்கலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள் என்றும், மருத்துவக்கலை சர்வகலாசாலையாகிய கடைச் சங்கத்தில் ஓம்பப்பெற்று வந்ததென்றும், எல்லாக்கலைகளிலும் வல்லவரான சித்தர்களால் இக்கலை பலவகையாலும் வளர்க்கப்பட்டு சிறப்புற்று விளங்கிற்று என்றும் கூறினும்.

---

## PART 1I.

## தமிழ்நாட்டில் பயின்றுவரும் அறுவகை முறைகள்.

நம் செந்தமிழ் நாட்டில் இன்றைக்குப் பயின்றுவரும் முறைகள் ஆறு. அவையாவன:—

(1) தமிழர் முறை (Sidda).
(2) ஆங்கில முறை (Allopathic).
(3) ஆரியர் முறை (Ayur Vedic).
(4) மகமதியர் முறை (Unani).
(5) இயற்கை முறை,(Naturopathic).
(6) ஜர்மானிய முறை (Homeopathic).

### ஆங்கில முறை.

ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்தபிறகு தான் ஆங்கில முறை இந்நாட்டிற்கு வந்தது.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



மகமதியர் காலத்தில் யூனானி முறை வந்தது.

ஆரியர்கள் காலத்தில் ஆயுர் வேதம் கையாளப்பட்டது.

ஜர்மன் பாதிரிகளால் ஜர்மன் முறை இந்நாட்டில் கொண்டு வரப்பட்டு வழக்கத்தில் இருக்கிறது.

இந்த முறைகளுக்கெல்லாம் முன்னாடியே இந்த நாட்டில் இருப்பது தமிழர் முறையும் இயற்கை முறையும் ஆகும்.

கிண்டியில் (King Institute) கிங் இன்ஸ்டிடியூட்டை சென்னைக் கவர்னர் லார்டு ஆமதில் என்பவர் திறந்து வைத்த காலத்தில், அதாவது இன்றைக்கு நாற்பது வருடங்களுக்குமுன், சொன்னதாவது:—

"ஐரோப்பா மருத்துவக்கலை இன்னதென்றே அறியாமல் அறியாமையில் மூழ்கி இருந்தபோது, இந்தியாவானது வியாதி வராமல் தடுக்கவேண்டிய முறைகளையும், வியாதி வந்துவிட்டால் சிகிச்சைசெய்து குணப்படுத்தும் முறைகளையும், சல்லிய முறைகளையும் கையாண்டு வந்திருக்கிறது இந்தியாவிலிருந்து தான் மருத்துவக்கலை ஐரோப்பாவிற்கு எட்டியிருக்கிறது என்று கர்னல் கிங் என்பவர் எடுத்துக்காட்டினதற்கு இந்திய ஜனங்கள் அவர் பால் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்" என்று பேசி இருக்கிறார்.

17-வது நூற்றாண்டில் தான் ஐரோப்பிய வைத்தியர்கள் அரபிய வைத்தியர்களிடமிருந்து இக்கலையைத் தெரிந்து கொண்டு ஆங்கில முறையை வளரச் செய்தார்கள்.

அராபியாவானது கி. மு. 10000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் வைத்தியர்களிடமிருந்து இக்கலையைக் கற்றுக்கொண்டார்கள் என்பது அரபி, பாபிலோனியா, எகிப்து முதலிய நாட்டு சரித்திரங்களால் வெளியாகிறது.



## யூனானி முறை.

தற்காலம் ஆராய்ச்சியாளர்கள் அராபியா, பாலஸ்தீன், அசிரியா, எகிப்து முதலிய நாடுகள் எல்லாம் தமிழர்கள் குடியேறிய நாடுகள் என்கிறார்கள்.

அந்நாடுகளுக்குத் தமிழர்கள் கி. மு. 10000 ஆண்டுகளுக்கு முன்னரே சென்றிருக்கிறார்கள் என்பது பைபிள் (Old Testament) என்னும் நூலால் அறிகிறோம். அவர்கள் அங்கே சென்றபொழுது சித்த வைத்தியர்களும் இரண்டொருவர் உடன் சென்றார்கள். சித்தநூற்களும் உடன் சென்றன என்பது துணிபு.

அக்காலத்தில் ஆரியர்கள் இந்தியாவில் புகவில்லை.

ஆரியர் படையெடுப்புக்கு முந்தியே இந்தியாவுக்கும் அராபியா, பாரசீகம், எகிப்து முதலிய நாடுகளுக்கும் தரை மார்க்கமாகவும் தண்ணீர் மார்க்கமாகவும் வியாபாரங்கள் நடைபெற்றன.

தரை மார்க்கத்துக்கு Indo Syrian Caravan route இந்தோ சிரிய ஒட்டகை மார்க்க வழி என்று பெயர்.

கடல் மார்க்கத்திற்கு Indo Syrian Sea route இந்திய சிரிய கடல் வழி என்று பெயர்.

பைபிளில் கூறப்பட்ட டேவிட் என்னும் அரசர், சாலமன் அரசருடைய தகப்பனார். புத்திக்கூர்மைக்கு சாலமனைக் கூறுவதுண்டு 'As wise as Soloman' என்பது பழமொழி.

டேவிட், சாலமன் இவர்கள் அரசாளுங்காலத்தில் அவர்களுடைய மரக்கலங்கள் பாண்டி நாட்டில் உள்ள உவரித் துறைமுகம் வந்துகொண்டிருந்தன என்பது தெரிகிறது.

உவரி என்னும் ஊர் தூத்துக்குடிக்குச் சமீபத்தில் உள்ளது.

அதனை ஈபரு ஜாதியார் 'Ophir' என்று அவர்கள் சரித்திரத்தில் கூறியுள்ளார்கள், (Vide I King IX 27-28).

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



அக்காலத்தில் பாண்டியர்கள் கொற்கையில் அரசாண்டார்கள். உவரி பிரதான கடற்கரைப் பட்டினமாக இருந்தது.

அக்காலத்தில் மரக்கலம் ஓட்டுவதில் பேர்போன பினிசியர்களும் செல்வத்தில் மிக்க பாபிலோனியர்களும், யூபரடிஸ் நதி வழியாக பர்சியன் குடா வந்து அரபிக்கடல் மார்க்கம் பாண்டியருடன் கப்பல் வியாபாரம் நடத்தினார்கள்.

தமிழர்களும் மரக்கலம் ஓட்டுவதில் பினிசியர்களுக்குப் பின்னடைந்தவர்கள் அல்ல.

தற்காலம் ஆங்கிலேயருக்கு Queen of the Seas என்ற பெயர் இருப்பதுபோல, அக்காலத்தில் சோழர்கள் கட்டுலகத்துக்கு அரசர்களாய் விளங்கினார்கள். அதனால் அவர்களுக்கு திரையர் என்று பெயர்.

கப்பற்படையிலும் சோழர்கள் மிகுந்தவர்கள். கடற் சண்டையில் இணைபற்றவர்கள் என்று உரோம் தேசத்துச் சரித்திரத்தால் அறிகிறோம்.

பாபிலோனியா நாட்டின் தலைநகர் ஊர் என்பது இது தமிழ்ப்பெயர். இந்த ஊர் என்னும் நகரம் கட்டிமுடித்து 5000 வருடங்கள் ஆகின்றன.

பாபிலோனியருக்கு முந்தி காலடியர் (Chaldeans) என்பவர்கள் அங்கே அரசு வீற்றிருந்த காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து துகில்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

துகில் என்பது நுண்ணிதாய் நெய்யப்பட்ட ஆடை. செல்வவான்களும் ராஜ ஸ்திரீகளுமே அணியக்கூடிய அவ்வளவு விலையுயர்ந்த பட்டாடை.

Vide

"உருவு அஞ்சாது இடைகாட்டும் கழலந்துகில்" கலித்தொகை.



இத்துகில் வியாபாரத்தைப்பற்றி உரையாசிரியர்களும் கலித்தொகையுரையில் கூறியுள்ளார்கள்.

' Zenoil-A-Rajozine என்னும் மாதரசி எழுதிய "வேதகாலத்து இந்தியா" என்னும் புத்தகத்து 305-வது பக்கத்தில் கீழ் வருமாறு கூறுகிறார்.'

"காலடியர் நாட்டிற்கு தமிழ் நாட்டிலிருந்து வந்த துகில்களைக் கவனிக்கும்போது, அவைகள் ஆரியர்களால் நெய்யப்படவில்லை என்றும் தமிழர்களால் நெய்யப்பட்டவை என்றும் தெரிகிறது" என்று ஆராய்ந்து கூறியுள்ளார்.

மேலும், தமிழ்நாட்டில் மாத்திரம் கிடைக்கக்கூடிய தேக்கு, மயிலிறகு, ஏலம், சந்தனக்கட்டை முதலியவைகள் காலடியர் கடைத்தெருவில் மலிந்திருந்தன என்றால் தமிழ் வியாபாரிகள் எவ்வளவு பேர் அந்நாட்டில் குடியேறி இருக்கவேண்டும் என்று பாருங்கள்.

எகிப்து தேச சரித்திரத்தைப் படித்தால் அதிலிருந்து எகிப்தியர் தெய்வத்தன்மை பொருந்திய 'பண்ட்' என்னும் இடத்திலிருந்து ஆதியில் எகிப்து நாட்டிற்கு வந்தவர்கள் என்று எழுதியிருப்பதை அறியலாம்.

பண்ட் என்பது பாண்டி நாடு. சமீபத்தில் வெளியான Dareel Babri என்னும் இடத்தில் Hastegop என்னும் மகாராணியின் பிரேதக்கோவிலை (Pyramid) ப்பார்த்தபொழுது அக்கோயிலில் செதுக்கப்பட்ட சரித்திரத்தால் மேற்காட்டிய பாண்டிய சரித்திரம் வெளியாகிறது.

எகிப்து நாட்டுப் பெண்களும் மலையாள நாட்டுப் பெண்களும் ஒரேவிதமான அங்க வளர்ச்சியுடையவர்கள் என்று உடல்நூல் வல்லவர் கூறுகிறார்கள்.

ஆகையால், எகிப்து நாடும், பாலஸ்தீனம், பாபிலோனியா. அராபியா முதலிய நாடுகளும் தமிழர்களுடைய குடியேற்ற நாடுகள் என்று விளங்கவில்லையா?

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



அங்கே அக்காலத்தில் குடியேறின தமிழர்களிடம் வழங்கி வந்த சித்த வைத்திய முறைதான் யூனனிமுறை யென்ற மறு பெயரோடு வழங்கிவந்தது.

யூனனி வைத்தியர்கள் கி. பி. 8-வது நூற்றாண்டில் தான் சிசிருத சம்ஹிதையை மொழி பெயர்த்தார்கள்.

ஆயுர்வேதத்துக்கும் யூனனிக்கும் பிறகு தான் தொடர்பு உண்டாயிற்று.

ஆகையால் தற்காலம் யுனனி என்பது ஆயுர்வேதமும் சித்தர் முறையும் சேர்ந்தது தான்.

## ஆயுர்வேதம்.

ஆயுர்வேதம் என்பது ஆரியர்களால் அவர்கள் கங்கை நதி தீரத்தில் அரசாண்ட காலத்தில் எழுதப்பட்ட முறையாகும்.

ஆயுர்வேதத்துக்கு முதலாசிரியர்கள் தேவ்தாசர் (தந்வந்திரி) சிசிருதர் என்பவர்களே. இவர்கள் இருவரும் ஒரு காலத்தவர்கள். சிசிருதர் தேவதாசரின் சிஷியர். கி. மு. 6000ல் இருந்தவர்கள்.

காசிதேசத்து அரசன் தேவதாசன்; அவரை தந்வந்திரியின் அவதாரமென்று புராணம் கூறும்.

பாற்கடல் கடையும்போது தந்வந்திரி உதித்தார் என்றும் அவரே தேவதாசரென்றும் இதிகாசம் கூறும்.

ஆயுர்வேதமானது 100 அத்தியாயங்கள் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயமும் 100 சுலோகங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆயுர்வேதம் 8 பிரிவுகளாக பிரிககப்பட்டிருக்கிறது:—

1. சல்லியம் (இரண வைத்தியம்)
2. சாலக்கியம் (கழுத்துக்கு மேற்பட்ட வியாதிகள்)



3. காயம் (மற்ற உடலின் வியாதிகள்)
4. பூதம் (பிசாசுக்குணங்கள் Hysteria)
5. கௌமாரம் (குழந்தை வைத்தியம்)
6. ஆகதம் (விஷங்களை பற்றியவை)
7. இரசாயனம் (இளமையாக்கல்)
8. வசிகரணம் (வீரிய விருத்தி)

தேவதாசருடைய சிஷியர் சிசிருதர் விசுவாமித்திருடைய மூத்தபிள்ளைக்கு அடுத்த பிள்ளை. இவர்கள் 7 பேர் அண்ணன் தம்பிகள்.

மூத்த பிள்ளையைத்தவிர மற்ற ஏனையோர் தேவதாசரிடம் ஆயுர் வேதத்தைக் கற்றுக்கொண்டார்கள்.

சிசிருதர்—சிசிருத சம்ஹிதை என்ற நூலை எழுதினர். இவர் இரண வைத்தியத்தில் (Surgery) நிபுணர்.

சம்ஹிதை என்றால் (Collection) மஞ்சரி என்று பெயர். அதாவது அவருக்கு முன்னிருந்த வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களை எல்லாம் எடுத்து அக்காலத்துக்குத் தகுந்தபடி ஒழுங்குபடுத்தி நூல் செய்தல் என்பது.

### வேதத்தில் கூறிய பரம்பரை.

இனி இருக்கு வேதத்தில் கூறிய பரம்பரையைக் கவனிப்போம்.

பிரமா
|
தக்ஷப்பிரஜாபதி
|
அசுவினி குமாரர்கள்
(சூரியனுக்கு பிறந்த இரட்டைப்பிள்ளைகள்)

“தாதயஞ்சி என்னும் முனிவர் முதல் முதல் சித்த இந்திரனிடத்தில் பிரம வித்தையாகிய வைத்திய முறையைக் கற்றுக்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



கொண்டார்; பிறருக்குச் சொல்லக்கூடாது, சொன்னால் தான் சிஷியனுடைய தலையை வெட்டி விடுவதாகச் சொல்லி அதற்குச் சம்மதித்தபின் இந்திரன் தாதயஞ்சிக்குக் கற்றுக்கொடுத்தார்.

இம்மாதிரி இவ்வித்தையில் தாதயஞ்சி நிபுணராக விளங்கினார்.

அசுவினி குமாரர்கள் இதைத் தெரிந்து அவ்வித்தையைத் தாங்களும் கற்றுக்கொள்ள அவாக்கொண்டு தாதயஞ்சியிடம் அனுகி விண்ணப்பித்துக்கொண்டார்கள். தாதயஞ்சி தனக்கும் தன்னுடைய குருவுக்கும் ஏற்பட்ட நிபந்தனையைக்கூறி மறுத்து விட்டார்.

அசுவினி குமாரர்கள் அதற்கு ஒரு வழி இருப்பதாகக் கூறி சொல்லிக்கொடுக்கும்படி செய்தார்கள்.

தாதயஞ்சி இருவருக்கும் கற்றுக்கொடுத்தார்.

அசுவினி குமாரர்கள் தாதயஞ்சினுடைய சம்மதத்தின் பேரில் அவருடைய தலையை வெட்டி பத்திரப்படுத்தி விட்டு குதிரைத்தலையை வைத்துப் பொருத்திவிட்டார்கள். தாதயஞ்சி குதிரைத் தலையுடன் விளங்கினார். இதற்குள் சித்த இந்திரனுக்கு இந்தச் சங்கதி தெரிந்து, தாதயஞ்சியினுடைய குதிரைத் தலையை வெட்டி விட்டுப் போய்விட்டார்.

உடனே அசுவினி குமாரர்கள் பழைய தலையை வைத்துப் பொருத்திவிட்டார்கள். ஆகையால் குரு சாபமும் நிவிர்த்தியாயிற்று. தங்களுடைய காரியமும் கைகூடினது கண்டு எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஒருவருக்கு மூவராக ஆரியரில் இணையற்ற மருத்துவர்களாக விளங்கினார்கள்.

ஆனால் சில ஆரிய புரோகிதர்கள் அசுவினி குமாரர்களிடம் யாது காரணத்தினாலோ பகைகொண்டு அவர்கள் பேரில் கொலைக்



குற்றத்தைக் கற்பித்து யாகாதி காரியங்களில் அவிர்ப்பாகம் இல்லை என்றார்கள்.

கொஞ்ச நாள் இந்த மாதிரி ஆரிய ஜாதியினின்றும் விலக்கப்பட்டு இருந்தார்கள்.

இப்படி இருக்கும்போது அங்க ஈனனும் கிழவனுமான சியாவன முனிவர் சரயுபதி என்னும் அரசனுடைய மகளை அயோத்தியில் மணம் செய்துகொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தார். அசுவினி குமாரர்கள் அவரிடம் சென்று வைத்தியம் செய்து கிழட்டுத்தனத்தையும் அங்க ஈனத்தையும் போக்கி மகா சுந்தரமான இளம்பிராயமுள்ள புருஷனாகச் செய்துவிட்டார்கள். (Vide Rig. I. 117—130). அந்த முறைக்கு "சியாவன அவலேகம்" என்று பேர்.

இதனால் சியாவன முனியும் அவருடைய மனைவியும் அளவு கடந்த குதூகலத்தையடைந்து என்னவேணும் என்று வைத்தியரைக் கேட்டார்கள். அசுவினி குமாரர்கள் தங்களை மறுபடியும் ஆரியர் குழுவில் கூட்டிக்கொண்டு எப்போதும்போல் அவிர்ப்பாகம் கொடுத்து வரும்படி ஏற்பாடு செய்யவேணும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

முனிவர் உடனே தம்முடைய மாமனாராகிய சரயுபதி அரசனிடம் சென்று நடந்த விபரத்தைச் சொல்லி தான் அசுவினி குமாரர்களுக்கு வாக்குத்தத்தம் செய்து கொடுத்ததாகச் சொல்லி யாகம் ஒன்றைச் செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

அப்படியே, அரசன் யாகத்தை ஆரம்பித்துச்செய்து யாக முடிவில் அசுவினி குமாரர்களுக்கு அவிர்ப்பாகம் வழங்கி பழைய விரோதத்தை மாற்றிவிட்டார்.

அந்த யாகத்துக்கு வந்திருந்த இந்திரன் சினந்து தன்னுடைய வச்சிராயுதத்தை சியாவன முனிவர்மேல் எறிய ஆரம்பித்துக் கையைத் தூக்கவே கையானது தம்பித்து அப்படியே நின்றுவிட்டது.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



அசுவினி குமாரர்கள் இந்திரனுடைய கையை பழய மாதிரி கொண்டுவந்தார்கள்.

ஆரிய இந்திரன் சந்தோஷத்தை அடைந்து அசுவினி குமாரர்களுக்கு பழய நிலைமை அளித்தார்.

அதுமுதல் அசுவினி குமாரர்கள் தேவர்களுடைய வைத்தியர்களாக விளங்கினார்கள்.

பிறகு ஆரிய இந்திரன் இந்த பிர்ம வித்தையை அசுவினி குமாரர்களிடம் சிஷியனாக இருந்து கற்றுக்கொண்டார்.

இந்திரன் அத்திரேய முனிக்குக் கற்றுக்கொடுத்தான்,

அத்திரேயர் தம்முடைய ஆறு சிஷியர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். அத்திரேயர் அத்திரேய சம்ஹிதை செய்தார்.

(சித்த) இந்திரன்
|
தாதயஞ்சி
|
அசுவினி குமாரர்கள்
|
(ஆரிய) இந்திரன்
|
அத்திரேயர்
|
அக்கினிவேசர் (1000 B.C.) — பேதர் — ஜாதுகர்னர் — பராசரர் — க்ஷீரபாணி — ஆரிதர்

அக்கினிவேசர் (1000 B.C.)
|
சரகர் (320 B.C.)

ஆரித சம்ஹிதையானது ஆரிதருடைய கேள்விகளும் அத்திரேயருடைய மறுமொழிகளுமாக இருக்கிறது.



ஆறு பேர்களும் ஆறு நூல்கள் தங்கள் தங்கள் பேரால் எழுதியுள்ளார்கள்.

அத்திரேய சம்ஹிதை 5 காண்டங்களாக பிரிக்கப்பட்டு 46500 சுலோகங்களில் செய்யப்பட்டிருக்கிறது.

அக்கினிவேசர் நிதானஞ்சனம் என்னும் நூலை இயற்றியுள்ளார்.

அக்கினிவேசருடைய சிஷிய பரம்பரையில் வந்தவர் சரகர்.

இவர் காசியில் மிகவும் படித்த முனிவரான விசுத்தர் என்பவருடைய பிள்ளை.

இவர் சாரக சம்ஹிதை என்ற ஆரிய நூலை இயற்றியுள்ளார்.

இவருக்குப்பின்னால் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் சிந்து தேசத்தில் பிறந்த வாக்பட்டர் என்பவர் 'அஷ்டாங்க இருதயம்' என்னும் நூலைச் செய்தார்.

இவர் சரகர், அக்கினிவேசர், பேதர், சிசிருதர் இவர்களுடைய நூற்களைப் பெரும்பாலும் தழுவி எழுதியுள்ளார்.

கி. பி 12-வது நூற்றாண்டில் இருந்த மாதவாச்சாரியார் மாதவநிதானம் என்ற நூலைச் செய்தார்.

மாதவர் வியாதியைக் கண்டுபிடிப்பதிலும், வாக்பட்டர், சரகர் மருந்து செய்துகொடுப்பதிலும், சிசிருதர் இரண வைத்தியத்திலும் நிகரற்றவர்களாய் விளங்கினார்கள்.

1550 கி. பி. யில் பாவமிசிரர் என்பவர் பாவப்பிரகாசிகை என்னும் நூலை இயற்றினார்.

ஆகையால், ஆயுர்வேதமானது கி. மு. 6000 த்திலிருந்து தான் வளர்ச்சியுற்றது.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil



இதுகாறும் கூறியவாற்றால் சித்த வைத்திய முறையானது எல்லாவித முறைகளுக்கும் முந்தினதும் தாய் போன்றதும் பெண்களும் கற்றுக்கொள்ளக்கூடிய அவ்வளவு எளிமையுள்ளது என்றும் கூறினும். சித்த வைத்தியத்தில் அதிகம் சிலவு கிடையாது.

இவ்வளவு எளிமையும் சிறப்பும் வன்மையும் வாய்ந்த சித்த வைத்தியமுறைகளை எல்லோருக்கும் தெரிவிக்க ஆங்காங்கே வைத்திய சாலைகள் ஏற்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு முனிசிபாலிடியும் டிஸ்திரிக்டு போர்டும் ஸ்டைபெண்ட் கொடுத்து பிள்ளைகளை சித்த வைத்திய முறைகளை படிக்கச் செய்யவேண்டும்.

கிருஷ்ண விலாச பிரஸ், கோயமுத்தூர்.



III. வரலாற்று நூல் பிரிவு.

| | |
|---|---|
| (1) துடிசைப் புராணம் | 0—8—0 |
| (2) தமிழ் மொழிச் சிறப்பு | 0—2—0 |
| (3) நெற்குன்றவாணர் சரித்திரம் | 0—4—0 |
| (4) ஏகம்பவாணர் சரித்திரம் | 0—4—0 |
| (5) வடகொங்கின் வரலாறு | 0—4—0 |

கலை நூற் பிரிவு.

| | |
|---|---|
| (1) மருத்துவ நூல் வரலாறு | 0—4—0 |
| (2) சிற்ப நூல் | 0—4—0 |
| (3) இசைத் தமிழ் | 0—4—0 |
| (4) இறையனார் அகப் பொருள் மூலம் பாடபேதங்களுடன் | 0—2—0 |

கிடைக்குமிடம்.

1. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பவளக்காரத் தெரு,
சென்னை.

2. கோவைத் தமிழ்ச் சங்கம்,
வைசியாள் வீதி,
கோயமுத்தூர்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil